<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்</u>
<u>பள்ளிப்பட்டு</u>

<u>நிறைவேற்றுதல் மனு எண் 01/2015</u> <u>18/10/2023</u>

சாட்சி வா.த.சா.2, திரு. சுப்பிரமணி, த/பெ. நாகப்பன், வயது 80 அவர்களை சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதித் தரப்பில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u>

1. குமாரி அவர்களின் தாயாரும் எல்லாரும் ஒன்றாகத்தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை ஞானம் என்பவர் லீலா என்பவருக்கு விற்ற விவரம் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. லீலா, சண்முகம் என்பவருக்கு மேற்சொன்ன தாவா சொத்தினை விற்ற விவரம் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. தற்போது சண்முகம் என்பவர் தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்ற விவரம் குறித்து தெரியுமா என்றால் தெரியாது.

3. குமாரியின் தாயார் ஞானம் என்பவர் தனது சொத்தை விற்றக் காரணத்தினால் வாதி தாவா சொத்தில் பாக உரிமையை பெற தகுதியில்லை என்றால் சரியல்ல. வாதி குமாரி என்பவர் தாவா சொத்தில் கூட்டு உரிமையாளராக இருந்தது கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றும், அதனால் எனக்கு சாட்சி சொல்ல தகுதியில்லை என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/- A. தரணிதரன்
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
**பள்ளிப்பட்டு.**